மனனம் செய்ய
இந்த வார வசனம்:

**“எனவே, கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்.”**

(மாற்கு 10: 9)

திருப்பாடல் 129ல் வாசிப்பது போல் கடவுளின் கனிவோடு வாழ்வோம். கடவுளோடு இசைந்திருக்கும் குடும்பம் அவரின் அருளைப் பெறும். கடவுளுக்கு அஞ்சி நடப்பது தூய ஆவியின் கொடை. கடவுளின் கட்டளைப்படி நடந்தால் அவரின் அருளில் வாழ்வோம். கடவுளின் வழியில் நாம் நடக்கும் போது நமது உழைப்பின் பலனையும் அதற்கும் மேலும் சுவைப்போம் என இந்த திருப்பாடல் கூறுகிறது.

கடவுள் வழியில் நடக்காதவன் வாழ்க்கையில் விழுவான் தோல்வி காண்பான். மாற்கு நற்செய்தியில், மணவிலைக்கைப் பற்றி கேள்வி கேட்டு பரிசேயர்கள் இயேசுவை மடக்கப் பார்க்கின்றனர். மணவிலக்குச் செய்ய மோசே சட்டம் அனுமதித்தாலும் இயேசு அதனை மாற்றியமைக்கிறார். படைப்பின் தொடக்கத்தில் இவ்வாறு இல்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறார். ஆணையும் பெண்ணையும் இணைக்கும் கடவுளின் திட்டத்தை அவர் விளக்குகிறார். மக்களின் கல் மனதால் மணவிலக்கை மோசே அனுமதித்தார் என்பதை தெளிவுப்படுத்துகிறார்.

நமது திருமண வாக்குறுதியையும் குடும்பப் பண்புகளையும் ஆராய்ந்து பார்க்கும்படி இன்றைய வாசகங்கள் நமக்குச் சவால் விடுகின்றன. சமுதாயத்தின் அடித்தளமாகவும் இருக்கும் குடும்பம் கடவுளிடமிருந்தே அதன் கொடையைப் பெறுகின்றது என 2ம் வத்திக்கான் திருச்சங்கம் கூறுகிறது. திருமணத்தையும் குடும்ப வாழ்வையும் அச்சுறுத்தும் எதுவும் சிலுவையில் கிறிஸ்து காட்டிய அன்புக்கு ஈடாகாது என்பதை நாம் நம்புகிறோம். எத்துணை பெரியதாக இருந்தாலும் வாழ்க்கை சவால்களைச் சமாளிப்பதில் நாம் தனித்து விடப்படவில்லை என்பதில் நிம்மதி கொள்ளலாம். சிலுவையில் தன்னையே கிறிஸ்து அளித்தத் தியாகப் பலி வழியாக கடவுளின் மீட்புத் திட்டம் நமக்கு முழு விடுதலையை அளித்துள்ளது என்பதை எபிரேயர் 2ம் வாசகம் உறுதிப்படுத்துகிறது. இயேசு கிறிஸ்துவில் நமது வாழ்க்கையை அர்ப்பணித்து திருவுளப்படி வாழ்ந்தால் நம்மை தமது சகோதர சகோதரிகள் என்று அவர் அழைப்பார்.

என்னிடம் வாருங்கள் என்று ஆண்டவர் அழைப்பவர்களுக்கு இறையரசு சொந்தமாகும். கிறிஸ்து நம்மை ஒருப்போதும் கைவிடுவதில்லை என்பதால் கடவுளின் கனிவு என்றும் நம்மை விட்டு நீங்குவதில்லை. ✤

**இன்றைய வாசகங்கள்:**

தொநூ. 2, 18-24;
திபா. 128, 1-6;
எபி. 2, 9-11;
மாற்கு 10, 2-16
(or 10, 2-12)

INTERNAL CIRCULATION ONLY
BUL 40/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

3 அக்டோபர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக் காலம் 27 ஆம் ஞாயிறு

## எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்



மாதாந்திர கருப்பொருள்:
**ஆழத்தில் போடுங்கள்**

# கடவுளின் கனிவு

தொடக்க நூல் 2:18-24-ல் கடவுளின் கனிவை நம்மால் சற்று ஆழமாகவே உணர முடிகிறது. ‘எல்லாக் காட்டு விலங்குகளையும் வானத்துப் பறவைகளையும் உருவாக்கி’ அவற்றிற்கு மனிதன் பெயரிட அவனிடம் கடவுள் கொண்டு வந்தார். விலங்குகளும் பறவைகளும் மனிதனுக்கு ஏற்ற துணையாக இல்லை என்பதைக் கண்ட போது மனிதனுக்குத் துணையாகப் பெண்ணை கடவுள் உருவாக்கினார். கடவுள் பெண்ணை மனிதனிடம் கொண்டு வந்த போது, ‘இவளே, என் எலும்பின் எலும்பும் சதையின் சதையின் சதையும் ஆனவள்’ என சொன்னான். ஆணும் பெண்ணும் இருவரும் ஒன்றாகச் சேர்ந்து ஓரே உடலாகும் போது, அவர்கள் கடவுளின் உருவிலும் சாயலிலும் நிறைவு பெறுகிறார்கள்.